# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 10.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 5465/விசாரணை/E/2019**

திரு.P.கோவிந்தசாமி -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலூர்-11. -- பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (Lockdown) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (10.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு.P.கோவிந்தசாமி மற்றும் திரு.பிரபாகரன், பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர், அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலூர் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் 05.04.2019 தேதியிட்டு சென்னை, மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், தனது 06.02.2019 தேதியிட்ட மேல்முறையீட்டு மனுவிற்கு வேலூர் அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அலுவலக பொதுத் தகவல் அலுவலர் 19.03.2019 தேதியிட்ட கடிதத்தில், இனங்கள் 1, 2 ,4 ,5, 6, 7 ஆகியவற்றுக்கு வழக்கு எண். 34754/D/2014 நாள் 20.02.2015 மற்றும் வழக்கு எண்.5557/C/2014 நாள் 12.01.2016-ன்படி தகவல் வழங்க மறுத்துள்ளதாக தெரிவித்து, மேற்படி வழக்குகளின் நகல், இனம் 8-க்கு வாகனத்தின் பதிவு எண் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது, பிற விவரங்கள் வழங்கப்படாதது குறித்த தகவல், வரிசை எண்.9-க்கு தகவல் வழங்க மறுக்கப்பட்டுள்ளதால் அது பற்றிய விவரம் ஆகியவற்றை 3 இனங்களில் தகவல் வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 03.05.2019 தேதியிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளரின் மனுவை வேலூர், அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றுதலில் அனுப்பி வைத்துள்ளார். தகவல் கிடைக்கப் பெறாததால் மேல்முறையீட்டாளர் 04.05.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன் பிறகும் தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவல்களை வழங்கிட உத்தரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 10.06.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார்.

மேல்முறையீட்டாளரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசியில் வாயிலாக ஆஜராகி, தனது 10.01.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனு மற்றும் 06.02.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1) மனுவிற்கு தகவல் வழங்க மறுத்துள்ளது தொடர்பாக, 05.04.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில், 3 இனங்களில் தகவல்களை கோரியதற்கு, இதுநாள் வரை தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், ஆகவே தான் கோரிய தகவலை வழங்கிட பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடுமாறும் ஆணையத்தை கோரினார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

4. இது குறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளர் கோரியுள்ள இனங்களுக்கான தகவல்களை 15 தினங்களுக்குள் வழங்குவதாக ஏற்பளிப்பு செய்தார், பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை இவ்வாணையம் பதிவு செய்தும், மேல்முறையீட்டாளருக்கு கூடுதலாக ஒரு வாய்ப்பளித்தும், விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது:-

> *இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு 05.04.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்களை சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி வழங்குவதுடன், மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் 26.09.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் கோரியுள்ள இனங்கள் தொடர்பாக தகவல்கள் அடங்கிய கோப்புகள், பதிவேடுகள், கணினி நடவடிக்கைகள், ஆவணங்கள் உள்ளிட்டவற்றை மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, அவர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி வழங்கி, அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ அடங்கிய CD அல்லது புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 21 தினங்களுக்குள் ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.*

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 5465/விசாரணை/E/2019</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,
வேலூர்-11.

திரு.P.கோவிந்தசாமி த/பெ.பெரியசாமி,
ரெட்டிப்பாளையம் (கிராமம்)
சந்தவாசல் (அஞ்சல்), போளூர் (தாலுக்கா)-606 905,
திருவண்ணாமலை மாவட்டம்.

Copy to: File
RJ/PS 12.11.2020